வடமதுரையில்

கிணற்றில் தவறி விழுந்தவர் பலி

திண்டுக்கல் அக்.31

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை கொல்லப்பட்டியை சேர்ந்த விவசாய கூலி தொழிலாளி கணேசன் 50.

நேற்று மதியம் அதே பகுதியில் ஆடுகள் மேய்க்க சென்ற நிலையில், நீரில்லாத கிணற்றில் தவறி விழுந்தார். படுகாயமடைந்து கிடந்தவரை அப்பகுதியினர் மீட்டனர்.

108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் பரிசோதித்ததில் கணேசன் ஏற்கனவே இறந்தது தெரிந்தது.

வடமதுரை போலீசார் விசாரிக்கின்றனர்.

சிறுமி பாலியல் பலாத்காரம்

தொழிலாளிக்கு சாகும் வரை சிறை

திருவண்ணாமலை போக்சோ கோர்ட்டு தீர்ப்பு

திருவண்ணாமலை, அக்.31

திருவண்ணாமலையில் மூளை வளர்ச்சி குன்றிய சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த தொழிலாளிக்கு சாகும் வரை சிறை தண்டனை விதித்து திருவண்ணாமலை போக்சோ கோர்ட்டு தீர்ப்பளித்தது.

திருவண்ணாமலை கோசாலை பகுதியை சேர்ந்தவர் பாஷா (வயது 53), தொழிலாளி. இவர் சம்பவம் நடைபெற்ற சமயத்தில் திருவண்ணாமலை வேங்கிக்கால் பகுதியில் வசித்து வந்துள்ளார். கடந்த 2023ம் ஆண்டு மூளை வளர்ச்சி குன்றிய 16 வயதுடைய சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி தகாத படங்களை காண்பித்து பாஷா கட்டாயப்படுத்தி பலமுறை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

இது குறித்து தகவல் திருவண்ணாமலை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள போக்சோ வழக்குகளுக்கான சிறப்பு விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நேற்று இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி காஞ்சனா, மூளைவளர்ச்சி குன்றிய சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த தொழிலாளிக்கு சாகும் வரை சிறை தண்டனையும், 30 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். பின்னர் அவரை போலீசார் வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

ரெயிலில் பட்டாசு கொண்டு செல்லக் கூடாது

ரெயில்வே நிர்வாகம் உத்தரவு

சென்னை, அக்.31–

நடப்பாண்டில் தீபாவளி பண்டிகை நவ.8–ம் தேதியும், சாத் பண்டிகை நவ.13–ம் தேதியும் கொண்டாடப்படவுள்ளது. இதை முன்னிட்டு, ரெயில் நிலையங்களில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தவும், பாதுகாப்பை மேம்படுத்தவும் ஆர்.பி.எப். போலீசார் மற்றும் தமிழக ரெயில்வே போலீஸார் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கையை தொடங்கியுள்ளனர். சென்னை சென்ட்ரல் உள்பட முக்கிய ரெயில் நிலையங்களின் அனைத்து நுழைவாயில்களிலும் எக்ஸ்ரே லக்கேஜ்ஸ்கேனர்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் சி.சி.டி.வி. கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்படுகிறது. வெடிபொருட்களை எளிதில் கண்டறியும் மோப்ப நாய்கள் குழுக்கள் ரெயில் நிலையங்களில் தொடர் சோதனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ரெயில்களில் பட்டாசு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தனிப்படைகள் அமைக்கப்பட்டு ரெயில்கள் மற்றும் நடைமேடைகளில் தீவிர சோதனை நடத்தப்படுகிறது.

இதுதவிர, ஆர்.பி.எப். கலாசாரக்குழு சார்பில், ரெயிலில் பட்டாசுகளை கொண்டு செல்வதால் ஏற்படும் ஆபத்து தொடர்பாக ரெயில் நிலையங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதிக மின்கட்டணத்தை எதிர்த்து வழக்கு

தலைமை நீதிபதி அமர்வுக்கு மாற்றம்

சென்னை, அக்.31

தமிழகத்தில் அதிக மின்கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்து விசாரணை நடத்த குழு அமைக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கை சென்னை உயர்நீதிமன்றதலைமை நீதிபதி அமர்வுக்கு பரிந்துரை செய்து தனி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக சென்னை திருவேற்காட்டைச் சேர்ந்த காமேஷ் என்பவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறி இருப்பதாவது: "தமிழகத்தில் த.வெ.க. தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு 100 யூனிட் இலவச மின்சாரம், 200 யூனிட்டாக உயர்த்தப்பட்டது. ஆனால் கடந்த ஒன்றரை மாதங்களாக வீட்டு உபயோகம் மற்றும் வணிக ரீதியிலான மின் கட்டணம் பல மடங்கு அதிகரித்துள்ளது. இதுதொடர்பாக ஒன்றரை லட்சம் மின்நுகர்வோர் மின் வாரியத்தில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் பொதுமக்கள் கடுமையான பாதிப்பை சந்தித்து வருவதால் அதிக மின்கட்டண வசூல் குறித்தும், மின்கட்டண விதிப்பு குளறுபடிகளை சரிசெய்யும் விதமாகவும் குழு ஒன்றை அமைத்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும். அத்துடன் பழைய மின் கட்டண விதிப்பு நடைமுறைகளை பின்பற்ற மின்வாரியத்துக்கு உத்தரவிட வேண்டும், எனக் கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி பி.டி.ஆஷா, பொது நலன் சார்ந்து இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளதால், இந்த வழக்கை தலைமை நீதிபதி அமர்வுக்கு பரிந்துரை செய்து உத்தரவிட்டுள்ளார்.

எண்ணூர் முகத்துவாரப் பகுதி

சீரமைப்பில் தொடரும் அலட்சியம்

மீன்கள் செத்து மிதந்த விவகாரத்தில் இதுவரை நடவடிக்கை இல்லை

சுற்றுச்சூழல் அமைப்புகள் கடும் கண்டனம்



சென்னை, அக். 31 :

எண்ணூர் முகத்துவாரப் பகுதி சீரமைப்பில் தொடர்ந்து அலட்சியம் நிலவி வருகிறது எனவும், கடந்த சில மாதங்களுக்கு முன்பு இப்பகுதியில் மீன்கள் செத்து மிதந்த விவகாரத்தில் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை என சுற்றுச்சூழல் அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

எண்ணூர் முகத்துவாரம் மற்றும் மணலி தொழிற் பேட்டைப் பகுதிகளில் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் குறித்து 'எண்ணூர் முகத்துவாரத்தைப் பாதுகாப்போம் இயக்கம்' அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அரசு அமைப்புகள், நீதி மன்றம் மற்றும் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவுகளை நிறைவேற்றுவதில் நிலவும் தாமதம் மற்றும் விதிமீறல்களைச் சுட்டிக்காட்டி தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில், தமிழக அரசுக்கு கோரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளிலிருந்து தொடர்ச்சியாக வெளியேற்றப்படும் சாம்பல் கழிவுகள், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் மற்றும் அதிக வெப்பம் கொண்ட சுடுநீர் ஆகியவை எண்ணூர் நீர்நிலைகளில் கலப்பது பெரும் கவலையளிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் சுமார் 4 முதல் 6 டன் அளவிலான மீன்கள் செத்து மிதந்த விவகாரத்தில், இதுவரை முறையான காரணம் கண்டறியப்படவோ அல்லது நடவடிக்கை எடுக்கப்படவோ இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பக்கிங்காம் கால்வாய் மற்றும் கொசஸ்தலையாற்றில் தூர்வாரும் பணிகள் அரைகுறையாக நடைபெற்று வருகின்றன. ஆக்கிரமிப்புப் பாசிகளின் அச்சுறுத்தலால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தூர்வார ப்பட்ட கழிவுகளை ஆற்றின் கரைகளிலேயே கொட்டுவது விதிமீறல் என அக்குழு குற்றம் சாட்டியுள்ளது. கழிவுநீர் மேலாண்மையில் சற்றே முன்னேற்றம் காணப்பட்டாலும், அடையாளம் காணப்பட்ட 8 கழிவுநீர் வெளியேற்றப் பணிகளில் 4 இடங்களில் மட்டுமே பணிகள் முடிந்துள்ளன. தொழில் பயிற்சி மையம், மீன் அங்காடி போன்ற மக்களின் சமூகப் பயன்பாட்டுத் திட்டங்களும் நிதி நெருக்கடி மற்றும் துறை சார்ந்த குழப்பங்களால் முடங்கியுள்ளன. சுற்றுச்சூழல் சீரமைப்பு மற்றும் மீனவர் வாழ்வாதாரப் பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என அந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

CAPITALINDIA Rediscover Business

பதிவு அலுவலகம்: 701, 7வது தளம், அகர்வால் கார்ப்பரேட் டவர், பிளாட் எண் 23, டிஸ்ட்ரிக்ட் சென்டர், ராஜேந்திர பிளேஸ், புது தில்லி, இந்தியா 110008
தொலைபேசி: +91 11 49546000 மின்னஞ்சல்: wecare@capitalindia.com CIN: L74899DL1994PLC128577

உடைமை அறிவிப்பு (அசையா சொத்துக்காக)
(பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(1) இன் கீழ்)

'நிதிச் சொத்துகளின் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய உரிமைகளை அமல்படுத்துதல் சட்டம், 2002' கீழ், **'கேபிடல் இந்தியா ஃபைனான்ஸ் லிமிடெட்' [CIN NO. L74899DL1994PLC128577]** நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான நான், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12) மற்றும் 'பிணைய உரிமைகளை அமல்படுத்துதல் விதிகள், 2002' ன் விதி 3 ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கடன் ஒப்பந்த எண்: **NLNLAPCHN0037207** தொடர்பாக, கடன் பெற்றவர்களான **(1) புரோமோபாக்ஸ் பேட்டோகிராபி (அதன் உரிமையாளர் திரு. டில்லிதினேஷ் ஆர். பி. வாயிலாக), (2) திரு. டில்லிதினேஷ் ஆர். பி. (3) திருமதி. ஹேமங்கினி ஸ்ரீநிதி** (இவர்கள் அனைவரும் இனிமேல் கூட்டாக "கடன் பெற்றவர்கள்" என்று அழைக்கப்படுவர்) ஆகியோருக்கு, 18.11.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வழங்கியிருந்தேன். அதில், 13.11.2025 **நிலவரப்படி நிலுவையில் உள்ள மொத்தத் தொகையான ரூ. 35,13,734.00/ (ரூபாய் முப்பத்தைந்து லட்சத்து பதிமூன்றாயிரத்து எழுநூற்று மூப்பத்து நான்கு மட்டும்) மற்றும் கடன் ஒப்பந்தத்தின்படி 14.11.2025 முதல் கணக்கிடப்படும் வட்டி ஆகியவற்றை, அந்த அறிவிப்பைப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள்** திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

கடன் பெற்றவர்கள் அத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13ன் உட்பிரிவு (4) மற்றும் 'பிணைய உரிமைகளை அமல்படுத்துதல் விதிகள், 2002'ன் விதி 8 ஆகியவற்றின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை நான் 28.10.2026 அன்று நேரில் கையகப்படுத்தியுள்ளேன் என்பதை கடன் பெற்றவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடன் பெற்றவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும், இந்தச் சொத்து தொடர்பாக எவ்வித பரிவர்த்தனையிலும் ஈடுபட வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். அவ்வாறு ஏதேனும் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டால், அவை 'கேபிடல் இந்தியா ஃபைனான்ஸ் லிமிடெட்' நிறுவனத்தின் பொறுப்புரிமைக்கு உட்பட்டதாகவே இருக்கும். **13.11.2025 தேதிய நிலவரப்படி ரூ. 35,13,734.00/ (ரூபாய் முப்பத்தைந்து லட்சத்து பதிமூன்றாயிரத்து எழுநூற்று மூப்பத்து நான்கு மட்டும்) மற்றும் 14.11.2025 முதல் கடன் ஒப்பந்தத்தின்படி கணக்கிடப்படும் வருங்கால வட்டி.**

பிணையச் சொத்தை மீட்பதற்காகக் கடன் வாங்கியவருக்குச் சட்டத்தின் பிரிவு 13ன் உட்பிரிவு (8)ல் வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் குறித்த விதிகளின் பக்கம் கடன் வாங்கியவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்துகளின் விவரணை

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் (தற்போது குன்றத்தூர் வட்டம்), வரதராஜபுரம் கிராமத்தில், பழைய கதவு எண் 82, புதிய கதவு எண் 111 என்ற முகவரியில் அமைந்துள்ள, லட்சுமி நகர் லேஅவுட்டில், சர்வே எண் 536ன் ஒரு பகுதியில் (பட்டா எண் 8082ன் படி, சர்வே எண் 536/3A1C) அமைந்துள்ள, 3308 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி மனை (மனையெண் 123). இந்த மனையின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கில் மனையெண் 122, தெற்கில் மனையெண் 124, கிழக்கில் காலி நிலம், மேற்கில் 20 அடி அகல சாலை.

தேதி: 28.10.2026
இடம்: காஞ்சிபுரம் (தமிழ்நாடு)
அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி,
கேபிடல் இந்தியா ஃபைனான்ஸ் லிமிடெட்

CLIX CAPITAL SERVICES PVT. LTD. **Registered Office:** W2/14, 1st Floor, West Patel Nagar, **Delhi,** 110008

பிரிவு 13 (2)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002 ("SARFAESI சட்டம், 2002")-இன் பிரிவு 13(2)-இன் கீழ் அறிவிப்பு.

கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், அச்சட்டத்தின் கீழ் **கிளிக்ஸ் கேப்பிட்டல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (CCS)**-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகவும், அச்சட்டத்தின் விதி 3-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13 (12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியும், அச்சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு(களை) வெளியிட்டுள்ளேன். அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள், அந்தந்த அறிவிப்பில்(களில்) குறிப்பிடப்பட்டுள்ள தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடனாளி(களை) அந்த அறிவிப்பில்(களில்) குறிப்பிட்டு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் கடன் கணக்கு விவரங்கள்

1. Mr. U சௌரி தாஸ் S/o முத்திரியசாமி என்ற உத்திரசாமி
R/O 15/7, பழைய அமரஜ்சிபுரம் மெயின், ராயபுரம், ராயபுரம் சென்னை, தமிழ்நாடு-600013. மொபைல்: 8056971240
மின்னஞ்சல்: USOURIDASS@GMAIL.COM
மேலும்:- ஒம் ஸ்ரீ அதிபர சக்தி எண்டர்பிரைசஸ் எண். 22/47 தாண்டவராயன் தெரு தொண்டியார்பேட்டை, முருகன் கோவில் அருகில், சென்னை-600081
மேலும்:- பழைய கதவு எண். 26, புதிய கதவு எண்.8, சொத்து வரி டி.எண்.20, தாமரை தெரு, திருவள்ளூர் நகர், எஸ்.எண்.87/6, ஆவடி, விளிஞ்சியம்பாக்கம் கிராமம், பூந்தமல்லி எஸ்ஆர்ஒ, திருவள்ளூர் டி.டி.எண். 600071
2. Mr.ஜேசு பென்னர். S S/O சந்தானாதாஸ்
மொபைல்: 8124248225 மின்னஞ்சல்: MAIL2BENNER@GMAIL.COM
3. Mr. சந்தனதாஸ் U S/Oஉத்திரியாதாஸ்
மொபைல்: 9840310891 மின்னஞ்சல்: MAIL2BENNER@GMAIL.COM
4. திருமதி. பொன்னம்மாள் S W/O சந்தனதாஸ்
மொபைல்: 9840310891 மின்னஞ்சல்: MAIL2BENNER@GMAIL.COM
அதே (2-4) R/O 9/4, பழைய அமரஜ்சிபுரம் மெயின்,ராயபுரம் சென்னை, தமிழ்நாடு-600013. **மேலும்:-** பழைய கதவு எண். 26, புதிய கதவு எண்.8, சொத்து வரி டி.எண்.20, தாமரை தெரு, திருவள்ளூர் நகர், எ.எண்.87/6, ஆவடி, விளிஞ்சியம்பாக்கம் கிராமம், பூந்தமல்லி SRO, திருவள்ளூர் டி.டி, சென்னை-600071

கடன் கணக்கு எண்: - CXCHNLP0325759887
கடன் தொகை ரூ. 93,73,000/- NPA: 06.10.2026

கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை

21.10.2026. ரூ.97,25,767.64/- (தொண்ணூற்று ஏழு இலட்சம் இருபத்தைந்தாயிரத்து எழுநூற்று அறுபத்தேழு மற்றும் அறுபத்து நான்கு பைசா மட்டும்) (13.10.2026 அன்றுள்ள நிலவரப்படி)

பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள்: சர்வே எண் 87/6, பழைய சர்வே எண் 87/58 பகுதி, தாமரை எண் 127, பிளாக் எண் 33, வார்டு-ஜி ஆகியவற்றில் அமைந்துள்ள, 2826 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம் அனைத்தும், பழைய கதவு எண் 26, புதிய கதவு எண் 8, தாமரைத் தெரு, திருவள்ளுவர் நகர், ஆவடி, சென்னை- 600071, விளிஞ்சியம்பாக்கம் கிராமம், ஆவடி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரியில் எல்லையிடப்பட்டது மற்றும் பின்வருமாறு எல்லையிடப்பட்டுள்ளது:- வடக்கு: திரு. மாதவனுக்குச் சொந்தமான நிலம் தெற்கு: திரு. என்பவருக்குச் சொந்தமான நிலம் பாளையம் ஜான் வர்க்கிஸ் கிழக்கு: 20 அடி சாலை மேற்கு: வரிசை எண். 87/5 வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்கு வரை அளவிடுதல்: 77 அடி தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்கு வரை: 80 அடி கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 36 அடி மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 36 அடி ஆவடி துணைப் பதிவு மாவட்டத்திலும், திருவள்ளூர் பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது.

மேற்கூறிய நிலுவைத் தொகையை 60 (அறுபது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தத் தவறினால், சட்டத்தின் விதிகளின் கீழ், கையொப்பமிட்டவர் மேற்கூறிய பிணையச் சொத்துக்களை அமல்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாவார். சட்டத்தின் பிரிவு 13(13)-ன் படி, விற்பனை, குத்தகை அல்லது வேறு எந்த வகையிலும், இத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள பிணையச் சொத்துக்களில் எதையும் கையாளுவதிலிருந்தோ அல்லது மாற்றுவதிலிருந்தோ நீங்கள் தடுக்கப்படுகிறீர்கள் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். இந்த விதியை மீறுவது ஒரு குற்றமாகும் மற்றும் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடியது. கோரிக்கை அறிவிப்பின் நகல் கையொப்பமிட்டவரிடம் உள்ளது, மேலும் கடன் வாங்கியவர்(கள்), விற்பனையால், சாதாரண அலுவலக நேரங்களில் எந்தவொரு வேலை நாளிலும் கையொப்பமிட்டவரிடமிருந்து அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

தேதி: 31.10.2026இடம்: திருவள்ளூர் **கையொப்பம்/-, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளிக்ஸ் கேப்பிட்டல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்.**

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட். OMKARA ASSETS RECONSTRUCTION PRIVATE LIMITED

Regd. அலுவலகம்: 9, எம்.பி. நகர், 1வது தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர் 641607.Ph எண். 0421222144. கார்ப்பரேட் அலுவலகம்: கோதமிஞ்ஞர் சதுக்கம், 47வது தளம் N. C. கேல்கர் மார்க், R. G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை 400028. தொலைபேசி: 9200265444

[இணைப்பு IVA] [விதி 8 (6) மற்றும் 9 (1)இன் நிபந்தனை உட்பிரிவைப் பார்க்கவும்] **மின்ஏலத் தேதி: 26.11.2026**

அசையாச் சொத்துகளை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்று அமலாக்கச் சட்டம், 2002இன் கீழ், பிணையப் பற்று (அமலாக்கம்) விதிகள், 2002இன் விதி 8 (6)இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கையில், அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்று அமலாக்கச் சட்டம், 2002இன் கீழ், பிணையப் பற்று (அமலாக்கம்) விதிகள், 2002இன் விதி 8 (6) மற்றும் 9 (1)இன் ஏற்பாட்டுடன் சேர்த்துப் படிக்கையில், அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

கடன் பெறுபவர் மற்றும் இணைகடன் பெறுபவரின் பெயர்	நிலுவைத் தொகை (ரூபாயில்)	கோரிக்கை விடுக்கப்பட்ட தேதி அறிவிப்பு:	நேரடி உடைமை பெறப்பட்ட தேதி:
அங்காளபரமேஸ்வரி என்டர்பிரைசஸ்	31.10.2026 தேதியன்று ரூ. 1,89,84,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தொன்பது லட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்)	21.05.2019	19.02.2026
		கூடுதல் மதிப்பு: ரூ. 1,00,000/-	
ஒதுக்கீட்டு விலை (ரூ.): 68,61,000/-	முன்பணம் (ரூ.): 6,86,100	ஆய்வுத் தேதி: 17.11.2026	

சொத்தின் விவரம்: குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடம், S.F எண்: 140/1, கதவு எண் 8, ஈகவல்லி அம்மன் கோயில் தெரு, கம்பாளையம் சாலை, பெத்திக்குப்பம் கிராமம், திருவள்ளூர் மாவட்டம், திரு.சி.சந்திரனுக்குச் சொந்தமானது. அடி 7.5 சென்ட் (உடல் உடைமை)

EMD தொகையைச் செலுத்துவதற்கும், ஏலப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கும் கடைசித் தேதி: 25.11.2026, மாலை 6:00 மணி வரை.

ஏல தேதி மற்றும் நேரம்: 26.11.2026 நேரம்: 03:00P.M 05:00 P.M

பொதுமக்களுக்கும், குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெற்றவர்(கள்) மற்றும் இணைகடன் பெற்றவர்(கள்) ஆகியோருக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள அல்லது பிணையமாக வழங்கப்பட்டுள்ள அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை, 'டிபிஎஸ் பேங்க் இந்தியா லிமிடெட்' ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தனது கட்டுப்பாட்டில் (நேரடி உடைமையில்) எடுத்துள்ளார். 'லட்சுமி விலாஸ் பேங்க் லிமிடெட்' (தற்போது 'டிபிஎஸ் பேங்க் இந்தியா லிமிடெட்'), 30112023 தேதியிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின் (Assignment Agreement) வாயிலாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெற்றவர்(கள்) மற்றும் இணைகடன் பெற்றவர்(கள்) தொடர்பான கடனை 'ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்திற்கு மாற்றியுள்ளது. இந்நிறுவனம் 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கியிடம் 'செக்யூரிடைசேஷன் அண்ட் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி'யாக அங்கீகாரம் பெற்றுள்ளது. இதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 9, எம்.பி. நகர், 1வது தெரு, கொங்கு நகர் எக்ஸ்டென்ஷன், திருப்பூர் 641607; மற்றும் பெருநிறுவன அலுவலகம்: கோதமிஞ்ஞர் ஸ்கொயர், 47வது தளம், என்.சி. கேல்கர் மார்க், ஆர்.ஜி. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை 400028 ஆகிய முகவரிகளில் அமைந்துள்ளன. இந்நிறுவனம் 'ஓம்காரா பிஸ் 07/202324 டிரஸ்ட்' ன் அறங்காவலராகச் செயல்படுகிறது. மேலும், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்ட இந்தச் சொத்துக்கள், 'இருக்கின்ற நிலையில்' என்ற அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் ஏலம் விடப்படும். இதன் மூலம், கடன் பெற்றவர்(கள்)/பிணையதாரர்(கள்)/அடமானம் வைத்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநருக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகள் வசூலிக்கப்படும். ஏலத்திற்கான அடிப்படை விலை (Reserve Price), முன்பணம் வைப்புத் தொகை மற்றும் பிற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: 1. ஏலமானது OARPLஆல் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரான மெஸ்லர்ஸ் ஆர்கா இமார்ட் பிரைவேட் லிமிடெட் மூலம் 'ஆன்லைன்' முறையில் நடத்தப்படும். ஆன்லைன் ஏலத்திற்கான ஆவணத்தில், ஏலப் படிவம், உறுதிமொழி மற்றும் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கியுள்ளன. கூடுதல் விவரங்களுக்கு www.auctionbazaar.com என்ற இணையதளத்தைப் பார்க்கவும். உதவிக்கு தொலைபேசி எண்: 8370969696, மின்னஞ்சல்: contact@auctionbazaar.com / support@auctionbazaar.com ஆகியவற்றைத் தொடர்புகொள்ளலாம். பொறுப்பாளர்: திருமதி. எம். கிரண்மயி , அலைபேசி எண்: 7997043999, மின்னஞ்சல்: kiran@auctionbazaar.com. 2. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள், முன்பணத்தை செலுத்திய பிறகு, உள்துழைவு அடையாள எண் மற்றும் கடவுச்சொல் உருவாக்கவும், தரவுகளைப் பதிவேற்றவும், ஏல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் அல்லது ஆன்லைன் ஏல முறை குறித்த பயிற்சி போன்ற உதவிகளுக்கு, தொலைபேசி எண்: 8370969696, மின்னஞ்சல்: contact@auctionbazaar.com / support@auctionbazaar.com ஆகியவற்றைத் தொடர்புகொள்ளலாம். பொறுப்பாளர்: திருமதி. எம். கிரண்மயி , அலைபேசி எண்: 7997043999, மின்னஞ்சல்: kiran@auctionbazaar.com. 3. செலுத்து தொடர்பான சந்தேகங்கள் அல்லது செலுத்தைப் பார்வையிட விரும்பும் நபர்கள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி திரு. ஷகில் நிபானி அவர்களை அலைபேசி எண்: +91 9167490977 அல்லது மின்னஞ்சல்: shakil.nipani@omkaraarc.com வாயிலாகத் தொடர்புகொள்ளலாம். அல்லது அலுவலக வேலை நாட்களில், அலுவலக நேரத்தின் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலும் அணுகலாம். 4. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் அறிவுக்கு உட்பட்டவரை, மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, சொத்தின் மீது வேறு எந்தச் சுமையோ (encumbrance) அல்லது சட்டச் சிக்கலோ இல்லை. 5. ஏலத்தில் பங்கேற்கும் அனைத்து நபர்களும், இந்த ஆன்லைன் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்துப் புரிந்துகொண்டதாகவும், அவற்றுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும் கருதப்படுவார்கள். மேலும், ஏலதாரர்கள் 'திவால் மற்றும் திவாலா நிலைச் சட்டம், 2016' ன் பிரிவு 29Aல் குறிப்பிடப்பட்டுள்ள 'தொடர்புடைய தரப்பினர் இடையிலான பரிவர்த்தனைகள்' குறித்த விதிகளின் நோக்கத்திற்கு உட்பட்டே ஏலத்தில் பங்கேற்புள்ளனர் எனக் கருதப்படும். ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள், இச்சட்டத்தின் பிரிவு 29Aன் கீழ் இனக்கத்தை உறுதிசெய்து, அதற்கான பிரகடனத்தை ஏல விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும்.

விற்பனை குறித்த விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் வழங்கிய நிறுவனத்தின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் (http://omkaraarc.com/